# முக்கிய குறிப்புகள்

| | |
|---|---|
| **கதிரியக்கம்** | சில தனிமங்களின் அணுக்கருக்கள் சிதைவடைந்து ஆல்பா, பீட்டா மற்றும் காமாக் கதிர்களை வெளிவிடும் நிகழ்வு கதிரியக்கம் என்று அழைக்கப்படுகிறது.<br>***i)* இயற்கைக் கதிரியக்கம் :** சில தனிமங்கள் புறத்தூண்டுதலின்றி தன்னிச்சையாக கதிர்வீச்சுகளை வெளியிடுகின்றன. ***எ.கா :*** யுரேனியம், ரேடியம்.<br>***ii)* செயற்கைக் கதிரியக்கம் (அ) மனிதர்கள் மூலம் உருவாகும் கதிரியக்கம் :** செயற்கையாக அல்லது தூண்டப்பட்ட முறையில் சில இலேசான தனிமங்களை கதிரியக்கத் தனிமங்களாக மாற்றும் முறை ஆகும். ***எ.கா :*** போரான், பெரிலியம். |

## கதிரியக்கத்தின் அலகுகள்

| | |
|---|---|
| **கியூரி** | கதிரியக்கப் பொருள், ஒரு வினாடியில் $3.7\times10^{10}$ சிதைவுகளுக்கு உட்படுதல். |
| **ரூதர்ஃபோர்டு (Rd)** | கதிரியக்கப் பொருள், ஒரு வினாடியில் வெளியிடும் கதிரியக்கச் சிதைவின் அளவு $10^6$. |
| **பெக்கொரல் (Bq)** | கதிரியக்கத்தின் பன்னாட்டு **(SI)** ***அலகு.*** ஒரு வினாடியில் வெளியிடப்படும் கதிரியக்கச் சிதைவின் அளவு ஆகும். |
| **ராண்ட்ஜன் (R)** | நிலையான அழுத்தம், வெப்பநிலை மற்றும் ஈரப்பத நிலையில் 1 கிலோகிராம் காற்றில் கதிரியக்கப் பொருளானது $2.58\times10^{-4}$ கூலும் மின்னூட்டங்களை உருவாக்கும் அளவு. |

## ஆல்பா, பீட்டா மற்றும் காமாக் கதிர்கள்

| | |
|---|---|
| **ஆல்பா கதிர்கள்($\alpha$)** | இரண்டு புரோட்டான்கள் மற்றும் இரண்டு நியூட்ரான்கள் கொண்ட ஹீலியம் அணுவின் உட்கரு ($_2He^4$) ஆகும். |
| **பீட்டா கதிர்கள்($\beta$)** | இவை அனைத்து அணுக்களிலும் காணப்படும் அடிப்படைத் துகள்களான எலக்ட்ரான்கள் ஆகும் ($_{-1}e^0$). |
| **காமா கதிர்கள் ($\gamma$)** | ∴போட்டான்கள் எனப்படும் மின்காந்த அலைகளாகும். |
| **கதிரியக்க இடம்பெயர்வு விதி (அ) சாடி மற்றும் ஃபஜன் விதி** | i) கதிரியக்கத் தனிமம் ஒன்று ஒரு $\alpha-$துகளை உமிழும் போது அதன் நிறை எண்ணில் நான்கும், அணு எண்ணில் இரண்டும் என்ற அளவில் குறைந்து புதிய சேய் உட்கரு உருவாகும்.<br>ii) கதிரியக்கத் தனிமம் ஒன்று ஒரு $\beta-$துகளை உமிழும்போது அதன் நிறை எண் மாறாமலும், அணு எண்ணில் ஒன்று அதிகரித்தும் புதிய சேய் உட்கரு உருவாகும். |

$_{92}U^{235}$ — **நிறை எண் (A)**, $92$ — **அணு எண் (Z)**

**நிறை எண் = புரோட்டான்களின் எண்ணிக்கை + நியூட்ரான்களின் எண்ணிக்கை**
**அணு எண் = புரோட்டான்களின் எண்ணிக்கை**

**ஆல்பா சிதைவு** : $_ZY^A \rightarrow {}_{Z-2}Y^{A-4} + {}_2He^4$

**பீட்டா சிதைவு** : $_ZY^A \rightarrow {}_{Z+1}Y^A + {}_{-1}e^0$

## அணுக்கரு பிளவு

| | |
|---|---|
| **அணுக்கரு பிளவு வினை** | கனமான அணுவின் உட்கரு, பிளவுற்று இரண்டு சிறு உட்கருக்களாக மாறும் போது அதிக ஆற்றலுடன் நியூட்ரான்கள் வெளியேற்றப்படும் நிகழ்வு ஆகும்.<br>**எ.கா :** $_{92}U^{235} + {}_0n^1 \rightarrow {}_{56}Ba^{141} + {}_{36}Kr^{92} + 3\,{}_0n^1 + Q$ (ஆற்றல்) |
| **பிளவுக்குட்படும் பொருள்கள்** | நியூட்ரான்களை உட்கவர்ந்து நிலைநிறுத்தப்பட்ட பிளவுகளை ஏற்படுத்தும் கதிரியக்கப் பொருள் பிளவுக்குட்படும் பொருள் ஆகும். **எ.கா :** யுரேனியம்-235, புளுட்டோனியம்-239 |
| **வளமிக்க பொருள்கள்** | பிளவுக்குட்படாத கதிரியக்க தனிமங்களை நியூட்ரான்களை உட்கவரச் செய்து பிளவுக்குட்படும் பொருள்களாக மாற்றமுடியும். **எ.கா :** யுரேனியம்-238, தோரியம்-232 |
| **தொடர் வினை** | தன்பரவுதல் நிகழ்வின் மூலம் நியூட்ரான்களின் எண்ணிக்கை பெருக்குத் தொடர்வரிசையில் மிகவேகமாக பெருக்கமடைகின்றது. **வகைகள் :**<br>***i)*கட்டுப்பாடான தொடர்வினை :** வெளிவரும் நியூட்ரான்களின் எண்ணிக்கை 'ஒன்று' என்ற அளவில் கட்டுப்பான வினையாக பராமரிக்கப்படுகிறது.<br>***ii)*கட்டுப்பாடற்ற தொடர்வினை :** எண்ணற்ற நியூட்ரான்களின் பெருக்கமும், அதிகமான பிளவும் மற்றும் அதிக ஆற்றலும் வெளியேறுகின்றது. |
| **மாறுநிலை நிறை ($m_c$)** | தொடர்வினையைத் தொடர்ந்து நிலை நிறுத்துவதற்குத் தேவையான பிளவுப் பொருள்களின் குறைந்த அளவு நிறை ஆகும்.<br>✱ **குறைமாறுநிலை நிறை :** மாறுநிலை நிறையைவிடப் பிளவு பொருள்களின் நிறை குறைவு.<br>✱ **மிகைமாறுநிலை நிறை :** மாறுநிலை நிறையைவிடப் பிளவு பொருள்களின் நிறை அதிகம். |
| **அணு குண்டு (பிளவு வினை)** | **தத்துவம்** : அணுக்கரு பிளவு. இது கட்டுப்பாடற்ற தொடர்வினை என்ற தத்துவத்தின் அடிப்படையில், மிகக் குறுகிய காலத்தில் அதிக ஆற்றலுடன் கூடிய பெரு வெடிப்பு ஆகும். |

## அணுக்கரு இணைவு

| | |
|---|---|
| **அணுக்கரு இணைவு வினை** | மிக இலேசான இரு அணுஉட்கருக்கள் இணைந்து கனமான அணுக்கரு உருவாதல். **எ.கா :** $_1H^2 + {}_1H^2 \rightarrow {}_2He^4 + Q$ (ஆற்றல்) இவ்வினை உயர் வெப்பநிலை($10^7$ *to* $10^9$ K) மற்றும் அழுத்தத்தில் மட்டுமே நடைபெறும். |
| **விண்மீன் ஆற்றல்** | சூரியன் மற்றும் விண்மீன்களின் உள் அடுக்கில் அணுக்கரு இணைவு நடைபெறுவதால் அதிக அளவு ஆற்றல் உருவாகிறது. இது விண்மீன் ஆற்றல் எனப்படும். |
| **ஹைட்ரஜன் குண்டு (பிளவு வினை)** | **தத்துவம் :** அணுக்கரு இணைவு. இந்த வினைக்கு தேவையான உயர் வெப்பநிலை மற்றும் அழுத்தத்தை உருவாக்க, அணுகுண்டு ஒன்றை உள்ளடக்கியுள்ளது. அது வெடிக்கும்போது அணுக்கரு இணைவு ஏற்பட்டு கட்டுக்கடங்காத அதிக ஆற்றல் வெளியாகிறது |

| **குறியீடுகள்** | | **அனுமதிக்கப்பட்ட கதிர்வீச்சின் அளவு** |
|---|---|---|
| ✱ எலக்ட்ரான் - $e^-$ | ✱ டியூட்ரியம் - $_1H^2$ | 1 வாரத்திற்கு 100 மில்லி ராண்ட்ஜன் (அ) 1 வருடத்திற்கு 20 மில்லி சிவர்ட் } பாதுகாப்பான அளவு |
| ✱ புரோட்டான் - $p^+$ | ✱ $\alpha$ துகள் - $_2He^4$ | 100 R → இரத்தப் புற்றுநோய் |
| ✱ நியூட்ரான் - $_0n^1$ | ✱ $\beta$ துகள் - $_{-1}e^0$ | 600 R → இறப்பு |
| ✱ பாசிட்ரான் - $_{+1}e^0$ | | |

## அணுக்கரு உலை

தற்சார்புடைய கட்டுப்படுத்தப்பட்ட அணுக்கரு பிளவு வினை நடைபெற்று மின் உற்பத்திச் செய்யும் இடம்.

| | |
|---|---|
| **எரிபொருள்** | பிளவுக்குட்படும் பொருள் எரிபொருளாக பயன்படுத்தப்படுகிறது. ***எ.கா :*** யுரேனியம் |
| **தணிப்பான்** | இது உயர் ஆற்றல் கொண்ட நியூட்ரான்களைக் குறைந்த ஆற்றல் கொண்ட நியூட்ரான்களாகக் குறைக்கிறது. ***எ.கா :*** கிரா∴பைட் மற்றும் கனநீர். |
| **கட்டுப்படுத்தும் கழி** | இது தொடர்வினையை நிலை நிறுத்தி நியூட்ரான்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துகிறது. ***எ.கா :*** போரான், காட்மியம் |
| **குளிர்விப்பான்** | இது அணுக்கரு உலையினுள் உருவாகும் வெப்பத்தை நீக்குவதற்காகப் பயன்படுகிறது. ***எ.கா :*** நீர், காற்று, ஹீலியம். |
| **தடுப்புச் சுவர்** | அபாயகரமான கதிர்வீச்சு சுற்றுப்புறச் சூழலில் பரவாமல் தடுத்து பாதுகாப்பதற்காகத் தடிமனான காரீயத்தலான சுவர் அணுக்கரு உலையைச் சுற்றி கட்டப்படுகிறது. |

✱ **பயன்கள்** : *மின் உற்பத்தி, கதிரியக்க ஐசோடோப்புகளை உருவாக்குதல், பிளவுக்கு உட்படாத பொருட்களைப் பிளவுக்கு உட்படும் பொருள்களாக மாற்றுதல், அணுக்கரு இயற்பியல் துறையில் ஆய்வினை மேற்கொள்வதற்கு பயன்படுகிறது.*

## கதிரியக்கத்தின் பயன்கள்

| | | |
|---|---|---|
| ✱ **வேளாண்மை** | கதிரியக்கப் பாஸ்பரஸ் (P-32) | பயிர் உற்பத்தியை அதிகரிக்க |
| ✱ **மருத்துவம்** | ✱ கதிரியக்கச் சோடியம் ($Na^{24}$)<br>✱ கதிரியக்க அயோடின் ($I^{131}$)<br>✱ கதிரியக்க இரும்பு ($Fe^{59}$)<br>✱ கதிரியக்கப் பாஸ்பரஸ் ($P^{32}$)<br>✱ கதிரியக்கக் கோபால்ட் ($Co^{60}$), கதிரியக்கத் தங்கம் ($Au^{198}$) | ✱ இதயம் சீராகச் செயல்பட<br>✱ முன்கழுத்து கழலையைக் குணப்படுத்த<br>✱ இரத்த சோகையை அடையாளம் காணவும் குணப்படுத்தவும்<br>✱ தோல் நோய்க்கு சிகிச்சை அளிக்க<br>✱ தோல் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்க |
| ✱ **தொழிற்சாலை** | ✱ கலிபோர்னியம் ($Cf^{252}$)<br>✱ அமர்சியம் ($Am^{241}$) | ✱ சுமைகளில் வெடிபொருள்களை கண்டறிய<br>✱ புகையை உணரும் கண்டுணர்வி |
| ✱ **தொல்லியல் ஆய்வு** | ✱ கதிரியக்கக் கார்பன் வயது | ✱ பூமியின் வயது, படிமப் பொருள்கள், பழமையான ஓவியங்கள் மற்றும் நினைவிடங்கள் |